2001 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

"In pursuance of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, C. Rangarajan, Governor of Tamil Nadu hereby give my recommendations for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2001-2002."

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, 2001-2002 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2001-2002 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய 13-9-2001 ஆம் தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை முழுமையாக வழங்கப்பெறுகிறது.

நிறைவேற்றப்பெற்ற 2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு		
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..	79,18
10	பால் வழங்கு செயல் திட்டங்கள் ..	8,10
15	காவல் துறை ..	3,20,60
17	கல்வி ..	3
18	மருத்துவம் ..	1,75,00
19	மக்கள் நல்வாழ்வு ..	63,93
23	கூட்டுறவு ..	1
27	ஊரக வளர்ச்சி ..	27,35
29	சமூக நலன் ..	4,43,12
32	வீட்டு வசதி ..	50,00
35	பாசனம் ..	5
38	சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து ..	2
42	பல்வகை ..	1
50	சுற்றுலா ..	17,10
மொத்தம் - அ. வருவாய்க் கணக்கில் செலவு		**11,84,50**
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு		
52	வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ..	82,82
54	பாசனம் குறித்த மூலதனச் செலவு ..	20

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)
56 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..	2
மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு ..	**83,04**
இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்	
61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ..	37,55
பெரு மொத்தம்	**13,05,09**

8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.